1986 ஏப்ரல் 25]

படையினால் ஏற்படும் தீமைகளைத் தவிர்க்கும் பொருட்டு அடையாள அட்டைகள் உடனடியாக வழங்க தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே இதுவரையில் தமிழ்நாட்டில் எத்தனை மீனவர்கள் இருக்கிறார்கள் ? எத்தனை மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன ? ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கே. வேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநிலத்திலுள்ள கரையோர மாவட்டங்களில் 402 மீனவக் கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமங்களில் மக்கள் தொகை 4 இலட்சம். இதில் 1 இலட்சம் பேர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். உள்நாட்டு மீனவர்களைப் பொறுத்த வரையில் இலட்சம் மீனவர்கள் இருப்பதாகத் தெரிகிறது. இதில் 60 சதவீதம் மீனவர்கள் மட்டும் மீன்பிடித்து வருகிறார்கள். இவர்களுக்கு இப்பொழுது தான் இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே தான் கார்டுகள் வழங்கும் திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். ஒட்டுமொத்தமாக மீன்பிடி தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ள உள்நாட்டு மற்றும் கடல் மீனவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

கடல்நீரை பாசனத்திற்குப் பயன்படுத்தல்.

568—(*வினா எண். 6589)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல் நீரை பாசனத்திற்கு பயன்படுத்துவது பற்றி ஆய்வு நடத்த ஒரு விஞ்ஞானிகள் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா சை. மு. யூசுப் : இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காத மிகவும் நெருக்கடியான சூழ்நிலை ஆண்டுக்காண்டு வளர்ந்து வருகிறது. ஆகவே, தற்போது இல்லை என்று சொன்னாலும், இன்றைக்கு வெளிநாடுகளில் பார்க்கின்றபொழுது கடல் நீர் குடிநீராகவும், மற்றும் பாசனத்திற்காகவும் இன்னும் பல்வேறு இனங்களுக்காகவும் மாற்றப்பட்டு வருகிறது உலக நாடுகளில்,

அந்த அடிப்படையில் நமது நாட்டிலும் தற்போது இல்லாவிட்டாலும் எதிர்காலத்திலேயாவது கடல் நீரை எந்த, எந்த இனங்களுக்குப் பயன்படுத்தலாம், நீர்ப்பாசனத்திற்கோ அல்லது குடிநீருக்காகவோ அல்லது மின்சாரத்திற்காகவோ மாற்றுகின்ற இந்த அடிப்படையில் விஞ்ஞானிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்து அது பரிசீலனை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியபடி, பாசனத்திற்காகவும், மின்சாரத்திற்காகவும், குடிதண்ணீருக்காகவும் கடல் நீரைப் பயன்படுத்தலாம் என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், பாசனத்தைப் பொறுத்தமட்டிலும் தண்ணீர் அதிகமான அளவு தேவைப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஏற்கெனவே பாசன நிலத்திற்கும் கடலுக்கும் உயரத்தில் மாறுபாடு இருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த முறையில், கடல் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்றால், நீரேற்று இயந்திரங்கள் மூலமாக, தண்ணீரை மேலே கொண்டு சென்றால் தான் பயன்படுத்த முடியும். கடல் நீரைச் சுத்தப்படுத்தி, அதற்குப் பிறகு நீரேற்று இயந்திரங்கள் மூலமாகத் தண்ணீர் கொண்டு செல்வதைவிட, பல புதிய திட்டங்களைத் தீட்டி, ஏற்கெனவே மேற்கு நோக்கி பாய்கின்ற, நதிநீர் அரபிக் கடலில் விழுந்து வீண் போகாமல், கிழக்குப் பக்கம் திருப்பி, தமிழகத்தை வளப்படுத்தக் கூடிய அளவுக்கு நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பு இருப்பதால், அதைப் பரிசீலிப்பதற்கில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேமாத்தூர் அணைக்கு நீர்வரத்து

569—(*வினா எண். 7336)—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் வட்டத்தில் மேமாத்தூர் அணைக்கு மேல் பாகத்தில் மணிமுத்தாறு, கோமதி, மாயூரா மற்றும் 10 அணைக்குமேல் கட்டப்பட்ட காரணத்தினால் 2,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமா. . சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.